# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 152/2025**

**Deposition of Witness for PW3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முனியாண்டி | Caste | : | |
| Father/Husband Name | : | பாண்டி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accuseds present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 18.04.2026**

**முதல்விசாரணை**

நான் தற்போது எழுமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜா மற்றும் சார்பு ஆய்வாளர் சுப்ரமணி ஆகியோர்களின் கையொப்பங்கள் எனக்கு தெரியும். நான் அவர்களுக்காக ஆவணங்களை பார்த்து, சாட்சி சொல்கிறேன். கடந்த 13.11.2016 ஆம் தேதி 12.12 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜா எழுமலை காவல் நிலைய பொறுப்பிலிருந்தபோது, புகார்தாரர் ஈஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்278/2016, இதச பிரிவுகள் 294(b), 324, 506(Ii) r/w 4 of TNPWH Act ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ. 2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே 13.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, சாட்சிகள் சீனிவாசன், தெய்வம் ஆகியோர்கள்

முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே **(அ.சா.ஆ. 3 மற்றும் 4)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் ஈஸ்வரி, ரமேஷ், ஆண்டிசாமி, சீனிவாசன் ஆகியோர்களையும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் சுப்ரமணி எதிரி கருப்பையாவை 13.11.2016ம் தேதி காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 2வது எதிரி மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்கள். புகார்தாருக்கு கிசிச்சை அளித்த மருத்துவர் ஜெயலெட்சுமி என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார். அந்த காயச்சான்று **(அ.சா.ஆ. 5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு இவ்வழக்கின் சட்டப்பிரிவினை இதச பிரிவுகள் 294(b), 324, 506(Ii) r/w 4 of TNPWH Act இருந்து இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(i) and r/w 4 of TNPWH Act ஆக பிரிவு மாற்றம் செய்து தனிஅறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த தனி அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறுதியாக சம்பவம் உண்மையென தெரியவந்ததால், எதிரிகளின் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று, சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றல் சரியல்ல. சம்பவ சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை காவல் நிலையத்தில்

வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சரிவரபுலண்விசாரணை செய்யாமல், குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு, இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.21 10:59:25 +0530